

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2050 | ஜூன் 13, 2019 | புரட்சி 18 | முழக்கம் 22 | விலை: ரூ.3.00

## தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட இளைஞர்களைக் குறி வைத்து தனிப் பயிற்சிகள் தொடக்கம்

# தமிழகத்தில் காலூன்ற ‘சங்கிகள்’ தீவிரம்

*தமிழ்நாட்டை ‘காவி’ மண்ணாக்கிட பார்ப்பனர்கள், ஆர்.எஸ்.எஸ். அமைப்புகள் தீவிரத் திட்டங்களை செயல்படுத்தத் தொடங்கி விட்டனர். கட்சி மேலிடமும் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட இளைஞர்களுக்கு வலைவீச பெருமளவு பணத்தை வாரி இறைக்கத் தயாராகி விட்டது. இது குறித்தும் அண்மைக்கால அரசியல் நிகழ்வுகள் குறித்தும் ஓர் தொகுப்பு:*

### தமிழகத்தில் வலிமை பெற ஆர்.எஸ்.எஸ். தயாராகிறது

சேலம் மாவட்டம் மின்னாம்பள்ளி எனும் பகுதியில் உள்ள ஏ.வி.எஸ். கல்லூரியில் வட தமிழகத்தைச் சேர்ந்த சுமார் 300 இளைஞர்களுக்கு ஆர்.எஸ்.எஸ். பயிற்சி வகுப்புகளை நடத்தியுள்ளது. அதேபோல் தென் தமிழகத்திலும் நடந்து வருகின்றன. குறிப்பிட்ட அமைப்புகளில் ஆர்வம் காட்டி செயல்படும் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட இளைஞர்களைத் திரட்டி, இந்தப் பயிற்சிகள் தரப்படுகின்றன. ஒவ்வொரு நாளும் தரமான உணவோடு 3 பேர் பயிற்சி அளிக்கிறார்கள். முதற்கட்டமாக ஆன்மீகம், யோகா, இந்து, இந்துத்துவம், தேசியம் என்று மென்மையாக மூளைச் சலவை நடக்கிறது. ‘நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து இந்திய தேசத்தை இஸ்லாமியர்களிடமிருந்து மீட்டெடுக்க நமக்கு நாமே தலைவர்களாகி களமிறங்க வேண்டும். இஸ்லாமியர்களுக்கும் கிறிஸ்துவர்களுக்கும் நாம் அடிமைகள் அல்ல; நமக்கு யாரும் தலைவர்களும் இல்லை” என்று வகுப்புகளில் வலியுறுத்தப்படுவதோடு, ‘ஜாதியாகப் பிளவுபடாமல் இந்துக்களாக ஒன்று சேருவோம்’ என்றும் வகுப்புகளில் பேசப்படுகிறது.

அதாவது, இஸ்லாமியர், கிறிஸ்துவர்களை வீழ்த்தி, பார்ப்பன சாம்ராஜ்யத்தை நிறுவ ஜாதிகளை மறந்து ஒன்றுபட அழைக்கிறார்கள். ஜாதிப் பிளவு வேண்டாம் என்று பேசப்படுகிறதே தவிர, ஜாதியே வேண்டாம் என்று பேசப்படுவது இல்லை. ஆர்.எஸ்.எஸ். வட தமிழகத் தலைவர் ஒருவர், மற்றும் கொச்சின் வன்னியராஜா, குரு சுப்பிரமணியம் ஆகியோர் முகாமை முன்னின்று ஏற்பாடு செய்துள்ளதோடு, அவர்கள் முகாமுக்கு அவ்வப்போது வந்து தேவையான உதவிகளையும் செய்து வருகிறார்களாம். இரவுநேரங்களில் ஆர்.எஸ்.எஸ். பிரதிநிதிகள் மாணவர்களைத் தனித்தனியாக சந்தித்துப் பேசி, அவர்கள் தேவைகள், எதிர்பார்ப்புகளை அறிந்து பொருளாதாரத் தேவைகளையும் நிறைவேற்றி வைக்கிறார்கள். தேவையான அரசு உதவிகள் கிடைக்கவும் ஏற்பாடு செய்யப்படும் என்று உறுதி தந்து வருகிறார்களாம்.

### பார்ப்பனர்கள் தயாராகிறார்கள்

மோடி மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகு பார்ப்பனர்கள், ஆச்சாரிகள் வரிந்து கட்டிக் கொண்டு களத்தில் இறங்கி வருகிறார்கள். பார்ப்பன சங்கராச்சாரி, சாமியார்கள் ‘இந்து ஆச்சாரிய சபா’ என்ற அமைப்பை வடமாநிலங்களில் நடத்தி வருகிறார்கள். அதன் தமிழ்நாடு மாநில அமைப்பை ஜூன் 7ஆம் தேதி திருச்சியில் தொடங்கி இருக்கிறார்கள். சபாவின் தேசிய செயலாளராக இருக்கும் விஜயேந்திர புரி என்பவர் தனது தொடக்க உரையில் தமிழ்நாட்டில் இந்துக்களை ஒரே குடையில் அணி திரட்டுவதே முதன்மையான இலக்கு என்று கூறியுள்ளார். இந்து கலாச்சாரம் பாரம்பர்ய கல்வி, பசு பாதுகாப்பு, இயற்கை விவசாயம் குறித்து விழிப்புணர்வுஇயக்கம் நடத்தத் திட்டமிட்டுள்ளதாக பின்னர் தேசிய செயலாளர் விஜயேந்திர புரி மற்றும் தமிழ்நாடு பிரிவுத் தலைவர் சாரதா சாமிகள் என்பவரும் செய்தியாளர்களிடம் கூறினர். ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்களின் செயல் திட்டத்தில் இப்போது ‘இயற்கை விவசாயமும்’ இணைந்திருக்கிறது என்பதை கவனிக்க வேண்டும்.

### ஆந்திர முதல்வரின் வகுப்புவாரி பிரதிநிதித்துவம்

தமிழ்நாட்டில் பெரியார் தொடங்கி வைத்த வகுப்புகளுக்கு சமநீதி வழங்கும் சமூகநீதிக் கொள்கையை ஆந்திராவின் முதல்வராகியுள்ள ஒய்.எஸ். ஜெகன்மோகன் (ரெட்டி) பின்பற்றியிருக்கிறார். அவரது சமூகம், முன்னேறிய சமூகம். ஆனால், 5 துணை முதல்வர் பதவிகளை உருவாக்கி, அவற்றை சமூகரீதியாகப் பிரித்து வழங்கியிருக்கிறார். பமுலா புஷ்பா சிறிவேணி (பழங்குடி), டில்லி சுபாஷ் சந்திரபோஸ் (பிற்படுத்தப்பட்டோர்) அல்ல கலி கிருஷ்ணசிறினிவாஸ் (கப்பு சமூகம்), கே. நாராயண சாமி (பட்டியல் இனப் பிரிவு), அம்சத் பாஷா (முஸ்லிம்) ஆகியோர் துணை முதல்வர்கள். அனைவருக்கும் வருவாய்த் துறை, மருத்துவக் கல்வி, பழங்குடி நலன், வரிவிதிப்பு என்று முக்கிய துறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. மட்டுமின்றி உள்துறை அமைச்சர் எனும் அதிகாரமிக்க பதவிக்கு சுச்சரிதா என்ற பெண் நியமிக்கப்பட்டிருக்கிறார். துவக்கம் நன்றாகவே இருக்கிறது.

### தமிழ்நாடு ‘பிராமண’ சங்கத்தில் ‘குடுமிபிடி’

‘பிராமணர்கள்’ தனியே சங்கம் வைத்துக் கொள்ளக் கூடாது என்று அறிவுரை வழங்கியவர் இராஜகோபாலாச்சாரி. அனைத்துக் கட்சி அமைப்புகள் அதிகார மய்யங்களில் ஊடுருவி, ஆதிக்கத்தைத் தக்க வைத்துக் கொள்வதே புத்திசாலித்தனம் என்பது அவரது கருத்து. அண்மைக்காலமாக ‘பிராமணர்கள்’ சங்கம் அமைத்துக் கொண்டார்கள். நடந்து முடிந்த தேர்தலில் துணை முதல்வர் ஓ. பன்னீர்செல்வத்தை நேரில் சந்தித்து தங்கள் ஆதரவையும் தெரிவித்தார்கள். ‘பிராமணர்’ சங்கம் என்பது ஜாதி சங்கம்அல்ல; அது ‘வர்ணாஸ்ரம’ சங்கம். அய்யர், அய்யங்கார், சாஸ்திரி, சர்மா என்ற பல்வேறு ‘பிராமண’ வர்ணப் பிரிவினர் இதில் உறுப்பினராக முடியும். இப்போது ‘அவாள்’ சங்கத்துக்குள்ளே மோதல் தொடங்கியிருக்கிறது. கடந்த ஜூன் 2ஆம் தேதி பழனியில் சங்கத்தின் பொதுக் குழுவைக் கூட்டி இருக்கிறார்கள். ஏற்கனவே மாநிலத் தலைவைராக செயல்பட்ட திருவொற்றியூர் நாராயணன் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்து அவரை பதவியிலிருந்து நீக்கியிருக்கிறது இந்தக் குழு. தற்போது பொதுச் செயலாளராக இருக்கும் ரமேஷ்குமார் என்பவர் இதை அறிவித்ததோடு பழனி ஹரிஹரமுத்து அய்யரை தலைவராக அறிவித்துள்ளார்.

அதேபோல் ஏற்கனவே செயலாளராக இருந்த சங்கரன், பொருளாளர் பாலசுப்பிரமணியம் ஆகியோரும் நீக்கப்பட்டு, அப்பதவிகளுக்கு தன்னையும், கணேசன் என்பவரையும் அறிவித்திருக்கிறார். இந்த பொதுக் குழுவைக் கூட்டுவதே சட்ட விரோதம் என்று நாராயணன் அணி நீதிமன்றத்தை நாடியிருக்கிறது. நீக்கப்பட்ட சங்கரன் என்பவர் இது சட்ட விரோதமான பொதுக் குழு என்றும், அறிக்கை விடுத்துள்ளார். சங்கத்தில் குழப்பம் ஏற்படுத்த சங்கரன் தன்னிச்சையாக இப்படி அறிக்கைகளை விடுவதாகவும், ‘பிராமண’ சங்க உறுப்பினர்களை அவமதிக்கும் வாசகங்கள் அவரது அறிக்கையில் இடம் பெற்றிருப்பதாகவும், சங்கரன் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்போம் என்றும் ரமேஷ் குமார் என்பவர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

‘சூத்திரர்’களை இழிவுபடுத்துவதில் ‘பிராமணர்கள்’ ஒற்றுமையாக இருந்தாலும், அமைப்பாகத் திரண்டு சங்கம் வைக்கும்போது தங்களுக்குள் மோதிக் கொள்கிறார்கள். ‘பிரம்மம்’ என்ற உயரிய நிலையை அடைந்தவனே ‘பிராமணன்’ என்று சொல்லிக் கொள்ளும் இந்த ‘பூதேவர்கள்’ பதவி அதிகாரத்துக்கு ‘குடுமிப்பிடி’ சண்டைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். பார்ப்பன ‘தினமலர்’ நாளேடு இந்த செய்தியை ‘பழனி கூட்டத்தில் விதி மீறவில்லை’ என்ற தலைப்பிட்டு வாசகர் கண்களுக்கு தெரியாததுபோல ‘பூசி மெழுகி’ செய்தி வெளியிட்டுள்ளது.

### பெண்ணுரிமையை செயல்படுத்திய ஒரிசா முதல்வர்

பா.ஜ.க.வின் மிரட்டல்களை முறியடித்து, ஒரிசாவில் அய்ந்தாவது முறையாக வென்றிருக்கிறார் நவீன் பட்நாய்க். அவரது வெற்றிக்குக் காரணம் பெண்களின் மகத்தான ஆதரவுதான். கடும்புயல் சேதத்தை அண்மையில் சந்தித்த மாநிலம் ஒரிசா. பெண்களுக்கான சுயஉதவிக் குழு ஒன்றை உருவாக்கி, அதற்கு ‘சக்தி மிஷன்’ என்று பெயரிட்ட நவீன், அந்த விழாவில் பங்கேற்கும்போதுதான் தேர்தல் ஆணையத்தின் நாடாளுமன்றத் தேர்தல் அறிவிப்பு வந்ததை அதிகாரிகள் அவரிடம் சொன்னார்கள். அமைதியாக அந்த செய்தியைக் கேட்டு தலையசைத்த நவீன், நிகழ்வின் இறுதியிலேயே தேர்தல் அறிவிப்பு செய்தியை அறிவித்ததோடு நிற்கவில்லை. 33 சதவீத இடங்களை பெண்களுக்கு தனது கட்சி ஒதுக்கும் என்று அறிவித்தபோது, பெண்கள் முழக்கமிட்டு இருக்கையிலிருந்து எழுந்து ஆர்ப்பரித்தார்கள். இளம் பெண்கள் சமூக வலைதளங்களில் நவீன் சொன்னதைச் செய்பவர் என்று எழுதினார்கள். 21 நாடாளுமன்ற தொகுதிகளில் ஏழு தொகுதிகளை பெண்களுக்கு ஒதுக்கினார். அவர்களில் பெரும் பாலோர் வசதியற்றவர்கள். அரசியல் பின்புலம் இல்லாதவர்கள். இந்தியாவின் இளம் நாடாளுமன்ற உறுப்பினராக சென்றிருப்பவர். ஒரிசாவின் பழங்குடி சமூகத்தைச் சார்ந்த சந்திராணி முர்மு, 25 வயதேயான பொறியியல் பட்டதாரி. பல பழங்குடி இளம் பெண்களை சட்டமன்ற உறுப்பினராக்கி, அமைச்சரவையில் சேர்த்திருக்கிறார், நவீன் பட்நாய்க். நாடாளுமன்றத்தில் பா.ஜ.க. ஓரளவு வெற்றிகளைக் குவித்தாலும் 147 சட்டமன்றத் தொகுதிகளில் 112 தொகுதிகளில் வென்றிருக்கிறது, அவரது பிஜூ ஜனதா தளம் கட்சி. பெண்ணுரிமைக்கான திட்டங்கள், தொடரட்டும்!

### தமிழ்நாட்டுக்கு பாதிப்பை உருவாக்கிய ‘நீட்’ முடிவுகள்

தமிழ்நாட்டில் ‘நீட்’ தேர்வை எழுதிய 48.57 சதவீதம் பேர் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். கடந்த ஆண்டு தேர்ச்சி விகிதம் 39.56 சதவீதம். ஆனாலும் அகில இந்திய சராசரி தேர்வு விகிதமான 56.5 சதவீதத்தைவிட தமிழ்நாட்டில் தேர்ச்சி விகிதம் குறைவு.

தமிழ்நாட்டில் அரசுப் பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளிலிருந்து தேர்வு எழுதிய 17,630 மாணவர்களில் 2,567 பேர் மட்டுமே தேர்ச்சி பெற்றுள்ளனர். இந்தப் பள்ளிகளிலிருந்து தேர்ச்சி பெற்றவர்கள் 4.27 சதவீதம் மட்டுமே.

அரசு மற்றம் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் ஆங்கில வழிக் கல்வி பயின்றவர்களில் 300லிருந்து 400 மதிப்பெண் பெற்றவர்கள் 23 பேர். தமிழ் வழிப் பள்ளியில் பயின்றவர்கள் 5 பேர் மட்டும்.

இந்தியாவிலேயே 25 மருத்துவக் கல்லூரிகளைக் கொண்ட மாநிலம் தமிழ்நாடு. மொத்தம் 3250 மருத்துவக் கல்லூரிக்கான இடங்களோடு மருத்துவ சேவையில் முன்னிலையில் நிற்கும் மாநிலம் நீட் தேர்வில் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்டது.

**தொகுப்பு: ‘ இரா’**

# தமிழ் பாட நூல்களின் இறை வாழ்த்து வேண்டும் என்று கேட்போருக்கு – சில கேள்விகள்

தமிழ்நாடு அரசு 14 ஆண்டுகளுக்குப் பிறகு பள்ளிப் பாடத் திட்டத்தை மிகச் சிறப்பாக வடிவமைத்துள்ளது. இப்போதைய கல்வித் துறை செயலாளர் உதயசந்திரன் - இதில் முழு ஆர்வம் காட்டி, பாடத் திட்டத்தின் ஒவ்வொரு வார்த்தையையும் கவனத்துடன் படித்து ஒப்புதல் வழங்கினார். தமிழகத்தின் மிகச் சிறந்த கல்வியாளரான அனந்தகிருட்டிணன் தலைமையில் 30 கல்வியாளர்கள் குழு இந்தப் பாடத் திட்டங்களை தயாரித்தது.

முதற்கட்டமான 1, 6, 9, 11ஆம் வகுப்புகளுக்கான புதிய பாடத் திட்டம் 2018ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. மீதமுள்ள 2, 3, 4, 5, 7, 8, 10, 12 ஆகிய வகுப்புகளுக்கு நடப்பு கல்வியாண்டில் பாடத் திட்டம் மாற்றப்பட்டுள்ளது. பாட நூல்கள் மிகவும் வரவேற்பைப் பெற்று நிற்கிறது.

இந்த நிலையில், புதிய பாடத் திட்டத்தில் தமிழ் புத்தகங்களில் ‘இறை வாழ்த்து’ நீக்கப்பட்டுள்ளது என்றும், மொழி வாழ்த்து மட்டுமே இடம் பெற்றுள்ளது என்றும் ‘இறை பக்தர்கள்’ சிலர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். பாரதிய ஜனதா கட்சியின் பொறுப்பாளர்களில் ஒருவரான இரா. சீனிவாசன் என்பவரும் அவர்களில் ஒருவர். ‘தமிழ் இந்து’ நாளேடு, இதை ஒரு பெரிய செய்தியாக்கி விவாதத்துக்கு உள்ளாக்கியிருக்கிறது.

பாடத் திட்ட தயாரிப்புக் குழுவில் இடம் பெற்றுள்ள கல்வியாளர்கள் இதற்கு தெளிவான பதிலை முன் வைத்துள்ளனர்.

“மாணவர்களிடம் கடவுள் நம்பிக்கையைத் திட்டமிட்டு திணிக்கக் கூடாது என்ற நோக்கத்துடனே பாட நூல்கள் தயாரிக்கப்பட்டன. இறை வாழ்த்தோ, எந்த மதத்தின் கடவுளையும் நேரடியாகக் குறிக்கும் சொற்களோ பாடத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. மற்றபடி இதற்கு வேறு எந்த உள்நோக்கமும் இல்லை. அதே நேரம் தேவாரம், திருவாசகம் உள்பட தமிழில் சிறந்த பக்தி இலக்கியங்களின் கருத்துகள், வரலாறுகள், மொழிச் சிறப்பு, அறிவியல் கூற்றுகள் பற்றி விரிவான குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. இது தவிர அனைத்து மதங்களையும் சார்ந்த புலவர்களின் பாடங்கள், புது கவிதைகள் பாடத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

பழங்காலத்திலும் இப்போதைய காலகட்டத்தில் இருக்கும் சூழல் வேறுபாடுகளை ஒப்பிட்டு விளக்கும் வகையில் பாடத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதுதான் மாணவர்களை அடுத்தக் கட்டத்துக்கு நகர்த்திச் செல்ல உதவியாக இருக்கும்” என்று பாடத் திட்டக் குழுவில் இடம் பெற்றுள்ள கல்வியாளர்கள் தெளிவாக விளக்கமளித்திருக்கிறார்கள்.

இப்போது எதிர்ப்பாளர்களுக்கு சில கேள்விகளை நாம் முன் வைக்கிறோம்:

- மொழி வாழ்த்து இருக்கிறது; ஆனால் இறை வாழ்த்து இல்லை என்று எதிர்ப்பதில் ஏதேனும் அறிவுடைமை இருக்கிறதா? மொழி என்பது இருக்கிறது; இது அறிவியல் உண்மை. ‘இறை’ என்ற ‘கடவுள்’ என்ற ஒன்று இருக்கிறது என்று இதுவரை அறிவியல்பூர்வமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறதா? இல்லை!
- மொழியையே கடவுள் தந்த ‘வரம்’ என்று நம்பிய காலம் ஒன்று இருந்தது. மொழியியலாளர்கள் மொழியின் தோற்றம், வளர்ச்சியை அறிவியல் அடிப்படையில் ஆராய்ந்து விளக்கிய பிறகு மொழியை கடவுள் உருவாக்கினார் என்ற நம்பிக்கை தகர்ந்தது.
- மனிதர்களின் பரிணாம வளர்ச்சி உயிர்களின் தோற்றம் குறித்து அறிவியல் ஆய்வுகள் வெளி வந்துவிட்டன. இதற்கும் ‘கடவுளுக்கும்’ எந்த ஒட்டும் உறவும் இல்லை என்பதை அறிவியல் நிரூபித்து உலகம் அதை ஏற்றுக் கொண்டுவிட்டது. எனவே ‘கடவுள்’ என்பது அறிவியலால் நிரூபிக்கப்படாத ஒரு நம்பிக்கை.
- பாட நூல்களில் ‘இறை வாழ்த்து’ கட்டாயம் இடம் பெற வேண்டும். அப்போதுதான் இறை நம்பிக்கை வளரும் என்று கூறுவதே கடவுள் சக்தியை கேள்விக்குள்ளாக்குவதுதான். உண்மையிலேயே கடவுள் சக்தி என்று ஒன்று இருந்தால் அது இயல்பாக குழந்தை பிறக்கும்போதே அந்த நம்பிக்கையுடன் பிறந்திருக்க வேண்டும். கடவுள் “தரும்” குழந்தையோடு தன்னுடைய சக்தியையும் அந்தக் குழந்தைக்கு ஊட்டியிருக்க மாட்டாரா? பசிக்கு அழும் குழந்தை, உடல் உபாதைக்கு பேசத் தெரியாத வயதிலேயே அழுது தனது உணர்வை வெளிப்படுத்தும் குழந்தை, கடவுளுக்காக பக்திக்காக அழுதிருக்கிறதா? பசியும் வலியும் இயற்கை உணர்வு. கடவுள் நம்பிக்கை என்பது செயற்கை உணர்வு என்பதற்கு இந்த ஓர் உதாரணமே போதும்.
- கடவுள் தனது சக்தியால் தன் மீதான நம்பிக்கையை உருவாக்க மாட்டார்; காரணம், அப்படி ஒரு கடவுள் இல்லை என்று உணர்கிறவர்கள்தான் ‘கடவுள் வாழ்த்து’, ‘கடவுள் தரிசனம்’, கடவுள் தொடர்பான சடங்குகளை நடத்தி, கடவுள் நம்பிக்கையை செயற்கையாகத் திணிக்க விரும்புகிறார்கள் என்று நாம் கூறினால், அதை நம்பிக்கையாளர்களால் மறுக்க முடியுமா?
- கடைசியாக ஒரு கேள்வி. தமிழ் பாட நூலில் தமிழில் இறை வாழ்த்து இடம் பெறவில்லை என்று கவலைப்பட்டு கண்ணீர் விடும் ‘இறை உணர்வாளர்கள்’ கோயிலுக்குள் தமிழ் வாழ்த்து மட்டுமே பாட வேண்டும்; சமஸ்கிருத அர்ச்சனைக் கூடாது என்று கேட்பார்களா?

பதில் தேவை!

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 13.06.2019**

# ‘நிமிர்வோம்’ வாசகர் வட்டத்தின் 10ஆம் கருத்தரங்கம்




‘நிமிர்வோம்’ மாத இதழின் பத்தாவது வாசகர் வட்ட சந்திப்பு 18.05.2019 அன்று சனிக்கிழமை, சென்னை மந்தைவெளி, செயின்ட் மேரிஸ் சாலையில் அமைந்துள்ள அப்துல் கலாம் மண்டபத்தில் மாலை 5 மணிக்கு தொடங்கியது. நிகழ்விற்கு ந. தமிழரசன் தலைமை வகித்தார். இந் நிகழ்வில், மயிலை மனோகர் ‘பெரியாரின் பெண் விடுதலைச் சிந்தனைகள்’ என்ற தலைப்பில் உரையாற்றினார். ‘பெரியாரின் கல்விச் சிந்தனைகள்’ குறித்து பெரியார் யுவராஜ் உரையாற்றினார். ‘இந்தியாவில் ஜாதிகள்’ என்ற புத்தகம் குறித்து துரையும், ‘நாடார் வரலாறு கருப்பா? காவியா?’ என்ற புத்தகம் குறித்து எட்வின் பிரபாகரனும் உரையாற்றினர். ‘இட ஒதுக்கீட்டின் இன்றைய நிலை’ குறித்து திவிக தலைமைக் குழு உறுப்பினர் கு.அன்பு தனசேகர் கருத்துரையாற்றினார். மேலும், சிறப்பு அழைப்பாளராக வருகைத் தந்த, திராவிட இயக்கச் சிந்தனையாளர் எழுத்தாளர் டான் அசோக், ‘இன்றைய இளைஞர்கள் திராவிட இயக்கம் குறித்து ஏன் தெரிந்து கொள்ள வேண்டும்’ என்ற தலைப்பில் கருத்துரையாற்றினார். இறுதியாக பிரவீன்குமார் நன்றியுரையாற்ற, நிகழ்வு இரவு பத்து மணிக்கு நிறைவடைந்தது. நிகழ்வை, சென்னை மயிலாப்பூர் தோழர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

# தாய்மொழிக் கல்வியே சிறந்தது என்பதை உறுதி செய்யும் ஆய்வுகள்

“தாய்மொழியில் பயில்வதன் மூலம்தான் ஒரு குழந்தை, தன் அறிவுத்திறனின் உச்சத்தை அடைய முடியும். புகழ்பெற்ற மொழியியல் அறிஞர் நோம் சாம்ஸ்கி, ‘குழந்தைகள், மனதளவில் எந்தத் தொந்தரவும் இல்லாமல் ஒரு மிதிவண்டியை ஓட்டிப் பழகுவதுபோல தாய்மொழியைக் கற்றுக்கொள்கின்றனர்’ என்கிறார்.

தாய்மொழிக் கல்வியே சிறந்தது என்பதை உறுதிசெய்யும் பல ஆய்வுகள் உலகமெங்கும் நடைபெற்றுள்ளன. அதில் முக்கியமான இரண்டு ஆய்வுகள் அமெரிக்காவில் நடைபெற்றவை. அமெரிக்க அரசு, தன் நாட்டில் வசிக்கும் மொழிச் சிறுபான்மையினருக்கு எந்தக் கல்விமுறையில் பயிற்றுவிப்பது என்பதை முடிவு செய்ய 1991இல் ‘ரமிரெஸ் எட் அல்’ (Ramirez et al 1991) என்ற ஆய்வை நடத்தியது.

பெரும் பொருள்செலவில் எட்டு ஆண்டு காலம் நடந்த இந்த ஆய்வின் பிரதான நோக்கம், ‘அமெரிக்காவில் வசிக்கும் லத்தீன் இன மாணவர்களுக்கு எந்தக் கல்விமுறையில் பாடம் நடத்துவது? ஆங்கில வழியிலா… தாய்மொழியான ஸ்பானிஷ் வழியிலா?’ என்ற கேள்விக்கு விடை கண்டறிவதே.

2,342 மாணவர்கள் இந்த ஆய்வில் இணைத்துக்கொள்ளப்பட்டு, அவர்கள் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். முதல் குழுவுக்கு ஆரம்பம் முதலே ஆங்கில வழி வகுப்புகள் நடத்தப்பட்டன. இரண்டாம் குழுவுக்கு, ஆரம்பத்தில் ஒன்று இரண்டு வருடங்கள் ஸ்பானிஷ் மொழியில் கற்பித்துவிட்டு, பிறகு ஆங்கில வழிக்கு மாற்றப்பட்டனர். மூன்றாவது குழுவினரை, ஒன்று முதல் ஆறு வகுப்புகள் வரை ஸ்பானிஷ் மொழியில் படிக்க வைத்து, கூடவே ஆங்கிலத்தை ஒரு மொழிப் பாடமாகவும் கற்பித்து, பிறகு ஆங்கில வழிக்கு மாற்றினார்கள். சில ஆண்டுகளுக்குப் பிறகு இவர்களின் அறிவுத் திறனை மதிப்பிட்டபோது ஆச்சர்யம் தரும் உண்மைகள் வெளிவந்தன.

தொடக்கத்தில் இருந்து ஆங்கில வழியில் படித்த மாணவர்கள், அறிவு, ஆற்றல், ஆங்கில மொழித்திறன் என அனைத்திலும் பின் தங்கி இருந்தனர். மாறாக, ஆரம்ப வகுப்புகளை ஸ்பானிஷ் மொழியில் படித்த மாணவர்கள் இவை அனைத்திலும் மேம்பட்டு இருந்தனர். குறிப்பாக மூன்றாம் குழுவினரின் ஆங்கிலத் திறன், ஆங்கில வழியிலேயே படித்த மாணவர்களைவிட மேம்பட்டதாக இருந்தது. அதாவது தாய்மொழி வழியில் கல்வி கற்பதன் வழியேதான், ஆங்கிலத்தையும் சிறப்பாகக் கற்க முடியும் என்பது இதில் இருந்து தெரிகிறது. மேலும் தாய்மொழி வழிக் கல்விதான் அறிவு, திறன், ஆற்றல் என அனைத்திலும் சிறந்து விளங்க உதவுகிறது என்பது இந்த ஆய்வின் மூலம் நிரூபிக்கப்பட்டது.

அதே அமெரிக்காவில் 1996-2001 ஆகிய ஆறு ஆண்டு காலம் நடத்தப்பட்டது தாமஸ்-கால்லியர் (Thomas - Collier) ஆய்வு. இரண்டு லட்சம் மாணவர்கள், அவர்களின் 15 ஆண்டு கால கல்விப் பதிவுகள்… இவற்றைக்கொண்டு நடத்தப்பட்ட இந்த ஆய்வு, உலக அளவில் முக்கியமான ஒன்று. 2002ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்த ஆய்வு முடிவும், தாய்மொழிவழிக் கல்விதான் சிறந்தது என்பதை பல்வேறு புள்ளிவிவரங்களுடன் உறுதி செய்கிறது.

அமெரிக்கா, தன் நாட்டின் வசிக்கும் மொழிச் சிறுபான்மையினரின் கல்வி முறையில் மாற்றம் கொண்டுவருவதற்கு முன்பு இப்படி நீண்ட ஆய்வுகளைச் செய்கிறது. ஆனால், இந்தியாவில் அரசாணைகள் கல்விக் கொள்கைகள் என்ற பெயரில் தாய்மொழிக் கல்வியை மறுக்கிறார்கள்.

**– பாரதி தம்பி**

# திருப்பூர் மாவட்டக் கழக முடிவுகள்



திருப்பூர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக கலந்துரையாடல் கூட்டம் வீரபாண்டி பிரிவு பொருளாளர் துரைசாமி வீட்டில் நடைபெற்றது. கூட்டத்தில் காமராசர் பிறந்த நாள் விழாவையொட்டி ஜூலை 14ஆம் தேதி திருப்பூரிலும், 15ஆம் தேதி பல்லடத்திலும், 16ஆம் தேதி மடத்துக்குளம் பகுதிகளிலும் தெருமுனைப் பிரச்சாரங்கள் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது. கூட்டத்தில் திருப்பூர் தோழர்கள் துரைசாமி, முகில்ராசு, நீதிராசன், அகிலன், முத்து, தனபால், விஜயகுமார், அய்யப்பன், பரிமளராசன், சிவகாமி, முத்துலட்சுமி, கனல் மதி, பிரசாந்த், நஜ்முன்னிசா, பல்லடம் கோவிந்தராஜ், சண்முகம், தேன்மொழி, மடத்துகுளம் மோகன், சிவானந்தம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## உலக நாடுகளை ஒப்பிட்டு ஆங்கில நாளேடு கட்டுரை

# குழந்தைகளுக்கு மும்மொழியைத் திணிப்பது இந்தியாவில் மட்டுமே

*“நடுவண் ஆட்சியின் 2019ஆம் ஆண்டுக்கான தேசிய கல்வி வரைவுக் கொள்கை” 3 முதல் 8 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு பல மொழிகளைக் கற்கும் திறன் அபாரமாக இருக்கிறது என்றும் பல்வேறு ஆய்வுகள் இதை உறுதிப்படுத்துவதாகவும் கூறுகிறது. (அறிக்கை பகுதி 4.5)*

*உண்மையில் உலக நாடுகளில் குழந்தைகளுக்கானக் கல்வி முறை – கற்றல் திறனை மேம்படுத்தவும் அவர்கள் மூளை வளர்ச்சி, உடல் ஆரோக்கியத்தை உறுதிப்படுத்துவதாகவும் இருக்கிறது. மேலை நாட்டுக் குழந்தைகளோடு இந்தியா போன்ற வறுமையின் பிடியில் கல்வி கற்க வரும் கிராமத்துக் குழந்தைகளை ஒப்பிட்டுப் பார்க்கவும் கூடாது. இந்தியாவில் தேசிய கல்விக் கொள்கைகளின் அறிவிப்புகள் அவ்வப்போது வந்தாலும் அது வெற்றுக் காகிதங்களாகி விடுகிறதே தவிர, கல்வியின் தரத்தை உயர்த்தவில்லை.*

*இது தொடர்பாக ‘இந்து’ ஆங்கில நாளேடு ஜூன் 7ஆம் தேதி வெளியிட்ட கட்டுரையின் சுருக்கமான தமிழ் வடிவம் இது:*

மத்திய அரசாங்கம் மும்மொழிக் கொள்கையை வெளியிட்டு ஒரு பெரிய சர்ச்சையை ஏற்படுத்தி யுள்ளது. இந்த தருணத்தில் பல தேசங்களில் குழந்தைகள் எவ்வளவு மொழிகளை கற்குமாறு கூறப்படுகின்றனர் எனும் கேள்வியை முன்வைப்பது அவசியமாகிறது. இக்கேள்விக்கான பதில் நம்மிடம் கோபத்தையும் அவமானத்தையும் ஒரு சேர உருவாக்கும். இங்கிலாந்து, ஜெர்மனி மற்றும் பல அய்ரோப்பிய நாடுகளில் ஆரம்பக் கல்வியில் ஒரே ஒரு மொழிதான். அதுவும் தாய் மொழி மட்டுமே பயிற்றுவிக்கப்படுகிறது. அதற்கு மேலே வரும்பொழுதுதான் அவர்கள் விரும்பும் மற்றொரு மொழி குழந்தைகளுக்கு கற்பிக்கப்படுகிறது. அமெரிக்காவில் ஆரம்பக் கல்வியில் ஆங்கிலம் மட்டும்தான்! பின்னர் ஸ்பானிஷ் அல்லது வேறொரு மொழி அனுமதிக்கப்படுகிறது. ஜப்பானில் ஆரம்பக் கல்வியில் ஜப்பானிய மொழி மட்டுமே! பின்னர் ஆங்கிலம் அனுமதிக்கப்படுகிறது. ஹாங்காங்கில் ஆங்கிலமும் பின்னர் சீன மொழியும் கற்பிக்கப்படுகின்றன. எகிப்தில் அரேபிய மொழி மட்டுமே கற்பிக்கப்படுகிறது. பின்னர் ஆறு ஆண்டு காலம் ஆங்கிலம் இரண்டாவது மொழியாக குழந்தைகள் கற்க வேண்டும். உலகம் முழுதும் குழந்தைகள் தமது தாய்மொழியை மட்டுமே ஆரம்பக் கல்வியில் கற்கின்றனர். பின்னர் இடை நிலைக் கல்வியில் இரண்டாவது மொழி கற்பிக்கப்படுகிறது.

இந்தியாவில் மட்டும்தான் குழந்தைகள் மூன்று மொழியைக் கற்க நிர்பந்திக்கப்படுகின்றனர். இந்தியாவில் நூற்றுக்கணக்கான மொழிகள், குறிப்பாக பழங்குடி இன மக்களின் மொழிகள், ‘மொழி’ எனும் அங்கீகாரத்தை இழந்துள்ளன. அத்தகைய குழந்தைகள் நான்கு மொழிகளைக் கையாளும் சுமை அரசாங்கத்தால் உருவாக்கப்படுகிறது.

அய்.நா.வின் யுனெஸ்கோ அமைப்பு 2016ஆம் ஆண்டு இந்தியாவில் சுமார் 4.7 கோடி குழந்தைகள் பத்தாம் வகுப்புடன் பள்ளிக் கல்வியை கைவிட்டு விட்டனர் என கண்டுபிடித்துள்ளது. இதற்கு பெண் குழந்தைகளிடம் காட்டும் பாரபட்சம், குடும்பப் பொருளாதாரச் சூழல், பெண் குழந்தைகளுக்குக் கழிப்பிட வசதியின்மை என பல காரணங்கள் உள்ளன. இவற்றுடன் இன்னொரு முக்கிய காரணம் மொழிச் சுமையும் ஆகும். குழந்தைகள் மூன்று அல்லது நான்கு மொழிகளைக் கற்கத் திணிக்கப்படும் பொழுது பல குழந்தைகள் பள்ளிக் கல்வியை கைவிடும் போக்கு உருவாகிறது. உலகம் முழுதும் நடைமுறைப்படுத்தும் அறிவியல் அடிப்படையிலான மொழிக் கோட்பாட்டை இன்று அல்லது நாளை இந்தியாவும் ஏற்றுக் கொண்டு தான் ஆக வேண்டும். அது என்ன ? தாய்மொழிதான் குழந்தைகள் கல்வி கற்பதற்கு ஏற்ற மொழி! தாய்மொழி வழிக் கல்விதான் குழந்தைகளுக்கு ஆழமான அறிவையும் புரிதலையும் உருவாக்கும். இந்தக் கோட்பாட்டை எவ்வளவு சீக்கிரம் ஆட்சியாளர்கள் உணர்கிறார்களோ அவ்வளவு நல்லது. எனினும் தாய்மொழி என்பது என்ன ? அரசாங்கம் திணிக்கும் மொழி தாய்மொழி அல்ல! ஒரு குழந்தைக்கு பெற்றோர்கள் எந்த மொழி தாய்மொழி என்று முடிவு செய்கின்றனரோ எந்த மொழி குழந்தையின் கற்றலுக்கு எளிதாக உள்ளதோ அந்த மொழிதான் தாய்மொழியாக இருக்க இயலும். வேறு எந்த மொழியும் குழந்தை மேல் திணிக்கப்படக் கூடாது.

மொழிப் பிரச்சனையில் நமது தேசம் பல போராட்டங்களை சந்தித்துள்ளது. தமிழகம், கர்நாடகா, தெலுங்கானா போன்ற பல மாநில மக்கள் தமது மொழிக்காக போராடியுள்ளனர். இந்த போராட்டங்களை அவ்வப்பொழுது ஆட்சியாளர்கள் மறந்துவிடுகின்றனர். கல்விக் கொள்கை என அவ்வப்பொழுது ஆட்சியாளர்கள் அறிவிப்பது வாடிக்கை! ஆனால் எத்தனை முறை இத்தகைய கொள்கைகள் அறிவிக்கப்பட்டபோதும் கல்வியின் தரம் உயரவில்லை என்பதுதான் நடைமுறை உண்மை. புதிய தேசிய கல்வி கொள்கை பழைய காயங்களை மீண்டும் உரசிப்பார்க்கிறது. சிலரின் தேர்தல் பிரச்சாரம் வரைமுறையற்ற விதத்தில் அமைந்தது. அது தேசத்தை பல தளங்களில் பிளவை உருவாக்கியுள்ளது. இந்த தருணத்தில் இந்த கல்வி கொள்கை அந்தப் பிளவை மேலும் அதிகரிக்கும் ஆபத்தை உருவாக்குகிறது. இந்தியைத் திணிப்பது என்பது மாநிலங்களுக்கு அரசியல் சட்டம் தந்துள்ள அடிப்படை உரிமைகளை தகர்க்கும் செயலாகும்.

இந்தி பேசாத மக்கள் மீது இந்தியைத் திணிக்க முற்படும் பா.ஜ.க.வின் ஆர்வக்கோளாறு மிகவும் தவறான அடித்தளத்தைக் கொண்டதாகும். தேசத்தின் மொழிகள் பற்றிய விவரங்களும் எந்த மொழி எந்த மக்கள் பிரிவினரால் பேசப்படுகின்றன எனும் உண்மையான விவரங்களும் பா.ஜ.க. அரசாங்கத்திடம் இல்லை. 2011 மக்கள் தொகைக் கணக்கீடு 52 கோடி மக்கள் இந்தியை தாய் மொழியாக கொண்டுள்ளனர் என குறிப்பிடுகிறது. ஆனால் இந்த கணக்கீடு மிகவும் மோசடியானது. போஜ்புரி மொழி பேசும் 5 கோடிப் பேரையும் இந்தி பேசுவதாகத் தவறாக சேர்த்துள்ளனர். அதே போல 61 வெவ்வேறு மொழிகளைப் பேசும் 9 கோடிப் பேரும் இந்தி மொழிக்கான பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளனர். இந்த 61 மொழிகளைப் பேசும் சமூகங்கள் இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், உத்தரப்பிரதேசம், ஹரியானா என பல மாநிலங்களில் பரவி உள்ளனர். **துல்லியமாக கூறுவதானால் இந்தியாவில் சுமார் 30% பேர்தான் இந்தி பேசுகின்றனர். 70% பேருக்கு இந்தி தாய்மொழியாக இல்லை.** தெரிந்தே ஒரு மொழிக்கு ஆபத்தை உருவாக்குவது என்பது இனப் படுகொலைக்கு சமம் என யுனெஸ்கோ கூறுகிறது. தேசியத்தைப் பரவலாக்குவது எனும் பெயரால் இந்தியைத் திணிக்க அரசாங்கம் முனைகிறது. இதற்கான குற்றவாளிகள் இந்தி பேசும் சாதாரண மக்கள் அல்ல! மாறாக இந்தி மொழியைத் தவறாகப் பயன்படுத்தும் போலி தேசியவாதிகளின் அரசியல் குற்றம் இது. இந்தியாவின் பன்முகத்தன்மைக்கு மதிப்பும் மரியாதையும் அளிக்கும் பொறுமை இவர்களுக்கு இல்லை. பன்முகத்தன்மையை உத்தரவாதப்படுத்தும் நமது அரசியல் சட்டத்தை காக்கும் பொறுமையும் இவர்களிடம் இல்லை.

கல்விக் கொள்கை என அவ்வப்பொழுது
ஆட்சியாளர்கள் அறிவிப்பது வாடிக்கை!
ஆனால் எத்தனை முறை இத்தகைய கொள்கைகள்
அறிவிக்கப்பட்ட போதும்
கல்வியின் தரம் உயரவில்லை என்பதுதான்
நடைமுறை உண்மை.

பா.ஜ.க. அரசாங்கத்தின் கல்விக் கொள்கைக்கு மிகவும் காத்திரமான கோபமான எதிர்வினைகள் முன்வந்துள்ளன. இது இந்தி அல்லாத மொழி களின் ஜனநாயக ஆர்வத்தைப் பிரதிபலிப்பது எனில் மிகை அல்ல. எனினும் இந்தித் திணிக்கப் படமாட்டாது என அரசாங்கம் கூறியுள்ளது. பா.ஜ.க. அரசாங்கத்தின் இந்த பதுங்கல் தற்காலிகமானது தான் எனக் கருதுவதில் தவறு இருக்காது. ஆனால் மொழி திணிக்கும் முயற்சி என்பது தொடக்கம் தான். ஒரு நாசகரமான அரசியல் கருத்தாக்கத்தின் ஆபத்தை இந்த மொழித் திணிப்பு கட்டியம் கூறு கிறது எனில் மிகை அல்ல! போலி தேசியவாதி களுக்கும் அரசியல் சட்டம் காக்கப்பட வேண்டும் என எண்ணும் ஜனநாயகவாதிகளுக்கும் இடையே பல முரண்பாடுகள் வெடிக்க காத்திருக்கின்றன. கலாச்சாரம், மொழி, அறிவாற்றல், நம்பிக்கை, வரலாறு, உலக கண்ணோட்டம், நவீனம் எனப்படுவது யாது என்பன போன்ற பல அம்சங்களில் இந்த முரண்பாடுகள் முன்னுக்கு வரும் ஆபத்து உள்ளது. வடக்கு- தெற்கு எனும் வடிவத்தில் இந்த மோதல் உருவாகிவிடக் கூடாது என நம்புவோமாக! நாகரீகம் மற்றும் அறிவாற்றல் ஆகிய இரண்டுக்குமே மொழிதான் அடித்தளம். எனவே எதிர்கால முரண்பாடுகளுக்கு மொழித் திணிப்பு துவக்கமாக அமைந்துவிடக்கூடாது.

**கட்டுரையாளர் : இந்திய மக்கள் மொழியியல் ஆய்வகம் (Peoples Lingusitic survey of India) எனும் அமைப்பின் தலைவர் 07.06.2019 ஆங்கில இந்துவில் வெளி வந்த அவரது கட்டுரையின் தமிழாக்க சுருக்கம் இது.**

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 13.06.2019**

## பால். பிரபாகரனிடம் வழங்கிய கட்டமைப்பு நிதி

1. தலைமை கழக கட்டமைப்பு நிதிக்காக தூத்துக்குடி எம்.எஸ்.எம். அரிசி கடை அதிபர் எம்.எஸ். மாலவராசு ரூ. 25,000/- (ரூபாய் இருபத்தி அய்ந்தாயிரம் மட்டும்) கழகப் பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரனிடம் வழங்கினார்.
2. பாளையங்கோட்டை கே.ஆர். குளிர்பானம் நிறுவனர் பொ. பொன்ராசு - ரூ. 2000/-
3. மேலகரம் பேரா.பழனிவேல் ரூ.1000/-

## மேட்டூர் படிப்பகத்தில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் செந்தில்



தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். செந்தில், எம்.பி., கழகத் தலைவர் கொளத்தூர் மணியை 07.06.2019 வெள்ளிக்கிழமை மாலை மேட்டூர் பெரியார் படிப்பகத்தில் மரியாதை நிமிர்த்தமாக சந்தித்து நன்றி கூறினார்.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# மும்மொழித் திட்டத்தை எதிர்த்து மேட்டூரில் கழகம் ஆர்ப்பாட்டம்




மத்திய பா.ஜ.க. அரசு மும் மொழித் திட்டத்தைத் திணிப்பதை எதிர்த்தும், மத்திய, மாநில அரசுப் பணிகளில் தொடர்ந்து வட நாட்டவரை பணியமர்த்தும் மத்திய, மாநில அரசுகளைக் கண்டித்தும், திராவிடர் விடுதலைக் கழகம் சேலம் மேற்கு மாவட்டம் சார்பில் மேட்டூர் பேருந்து நிலையத்தில் 07.06.2019 வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு சி.கோவிந்த ராஜ் (சேலம் மேற்கு மாவட்ட செயலாளர்) தலைமை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் திவிக தலைமை செயற்குழு உறுப்பினர் சக்தி கண்டன உரையாற்றியதைத் தொடர்ந்து, முல்லை வேந்தன் கண்டன உரை யாற்றினார்.

தொடர்ந்து திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மத்திய அரசின் இந்தி திணிப்பு மற்றும் வட நாட்டவர்களைத் தமிழகத்தில் பணியிலமர்த்தும் சூழ்ச்சியையும் விளக்கிப் பேசினார். இறுதியாக மேட்டூர் பகுதியைச் சேர்ந்த பிரதாப் நன்றியுரையாற்றினார். ஆர்ப்பாட்டத் திற்கு மேட்டூர், மேட்டூர் ஆர்.எஸ், கொளத்தூர், காவலாண்டியூர், நங்கவள்ளி போன்ற பகுதிகளைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண் டனர்.

# மேட்டூரில் ஒரு நாள் ‘பெரியாரியல்’ பயிற்சி வகுப்பு



மேட்டூர் தாய்த் தமிழ்ப் பள்ளியில் ஜூன் 8, 2019 அன்று ஒரு நாள் பெரியாரியல் பயிலரங்கம் சிறப்புடன் நடந்தது. மேட்டூரில் தொடர்ந்து மாலையில் மழை பெய்து வருவதால் பொதுக் கூட்டமாக நடக்க இருந்த நிகழ்ச்சியை பயிலரங்கமாக மாற்றிட தோழர்கள் திட்ட மிட்டார்கள்.

பயிற்சியில் 43 மாணவ, மாணவிகள், இளைஞர்கள் பங்கேற்றனர். மே 23, 24 தேதிகளில் காவலாண்டியூர் அய்யம் புதூரில் பயிற்சி பெற்ற மாணவ மாணவிகள் 15 பேரும் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, “ஏன் தோன்றியது திராவிட இயக்கம்?”, “திராவிடமும் தமிழ்த் தேசியமும்” என்ற இரண்டு தலைப்பு களிலும் பேராசிரியர் சுந்தரவள்ளி, ‘பெண்ணியம் ஓர் அறிமுகம்’, ‘இந்துத்துவத்தை எதிர்கொள்ளும் வழிமுறைகள்’ என்ற இரண்டு தலைப்புகளிலும் வகுப்புகள் எடுத்தனர். காலை 10 மணியளவில் தொடங்கிய வகுப்புகள், இரவு 8 மணி வரை நீடித்தது. பயிற்சியாளர்கள் ஆர்வமுடன் வகுப்புகளைக் கேட்டனர். மேட்டூர் நகர திராவிடர் விடுதலைக் கழகம், பயிற்சிக்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய் திருந்தது.

**– நமது செய்தியாளர்**

# முகிலன் எங்கே? சென்னை, எடப்பாடியில் ஆர்ப்பாட்டம்



**சென்னை :** சூழலியல் போராளி முகிலன் உயிருடன் இருக்கிறாரா? தமிழக அரசே, பதில் சொல்! என்ற முழக்கத்துடன், கண்டன ஆர்ப்பாட்டம் 01.06.2019 சனிக்கிழமை காலை 10 மணிக்கு சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்றது. காவிரி ஆறு பாதுகாப்பு இயக்கம் நிகழ்வை ஒருங்கிணைத்தது. ஆர்ப்பாட்டம் ஆர்.நல்லக்கண்ணு (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி) தலைமையில் நடைபெற்றது. அனைத்து ஜனநாயக கட்சிகள், இயக்கங்கள், மனித உரிமை அமைப்புகள், சூழலியல் செயற்பாட்டாளர்கள், திரைப்பட இயக்குனர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்து கொண்டு கண்டனத்தைப் பதிவு செய்தார்.




**எடப்பாடி :** சூழலியல் போராளி தோழர் முகிலன் எங்கே? என்ற முழக்கத்துடன் முகிலன் மீட்பு கூட்டியக்கத்தின் சார்பில் 06.06.2019 அன்று சேலம் மாவட்டம் எடப்பாடியில் மாலை 4 மணிக்கு, ஆதித் தமிழர் பேரவையின் க.ராதாகிருஷ்ணன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில், ஜனநாயக அமைப்புகள் மற்றும் சூழலியல் தோழர்கள் கலந்து கொண்டு முகிலன் எங்கே? என்று தங்களது கண்டனங்களை பதிவு செய்தனர். திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் சேலம் மாவட்ட அமைப்பாளர் கிருஷ்ணன் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். மேலும் நங்கவள்ளி தோழர்கள் கலந்து கொண்டனர்.

# 7 மாதம் ‘தடா’வில் சிறை சென்றவர் பெரியார் தொண்டர் ஞான. செபஸ்தியானுக்கு கழகம் இறுதி மரியாதை



பெரியார் மருந்தியல் கல்லூரியின் தாளாளரும் முதுபெரும் பெரியார் தொண்டருமான தோழர் ஞான செபஸ்தியான் (101), 04.06.2019 அன்று திருச்சியில் முடிவெய்தினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி இறுதி மரியாதை செலுத்தினார்.

அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, திருச்சி புதியவன் மற்றும் கழக முன்னணிப் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். மறைந்த அய்யா ஞான செபஸ்தியான், விடுதலைப் புலிகளுக்கு பல்வேறு உதவிகளைச் செய்த ஈழ ஆதரவாளர். இ.பி.ஆர்.எல்.எப். பத்மநாபா கொலை வழக்கில் பொய் குற்றச்சாட்டில் 7 மாதம் தடா சிறையில் இருந்தவரும் ஆவார்.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகை யாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 13th June 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN